ஊரான ஊரிழந்தோம் உறவுகள் நாம் பிரிந்தோம் 2
பார் எங்கும் அகதியானோம்
எங்கள் ஏக்கங்கள் தீர்ந்திடுமோ தாய் மண்ணை நாமும் காண்போமோ 2
தாய் மண்ணை நாமும் காண்போமோ

காலத்தின் தேவை நாம் இங்கு உணர்ந்திடுவோம்
புலம் பெயர் தமிழரெல்லாம் புயலாய் எழுந்திடுவோம் 2
கரிகாலன் பாதையில் அணிதிரள்வோம் 2

ஊரான ஊரிழந்தோம் உறவுகள் நாம் பிரிந்தோம்

மரநிழலே தஞ்ச மென்று சோகத்தை சுமப்ப வரும்
பசி வயிற்றில் பட்டினியால் பய வாழ்வு வாழ்பவரும்
வெய்யிலிலும் மழையினில் ஆதரிப்பார் யாருமின்றி
கொடிய பல நோய்களுக்கு இரையாகி வீழ்பவரும்

குண்டு மழை கொட்டிடவே குருதியிலே குளிப்பவரும் 2
இன அழிப்புப் போரினிலே இரையாகி மாழ்பவரும் 2
எம் இன மக்கள் என்று எண்ணியே பார்த்திடுவோம் 2

ஊரான ஊரிழந்தோம் உறவுகள் நாம் பிரிந்தோம்

பாதையே போகும் இந்த நிலையற்ற அகதி வாழ்வு
காலங்கள் ஓடிவிடும் விடிவேதும் கிடையாது
சம உரிமை பேசினிப்பார் செயலினிலே பிரிந்திடுவார்
மறக்காது மொழியாது மகுமையே ஒளித்திடுவார்

குளிர் நாட்டில் உழைத்த செல்வம் குலம் வழர கொடுத்திடுவோம் 2
எம்மினம் வழர எம் மொழி உயர நாமே துணையாய் நின்றிடுவோம் 2
தரணியில் தமிழீழம் உருவாகும் காத்திருப்போம் 2

ஊரான ஊரிழந்தோம் உறவுகள் நாம் பிரிந்தோம்